**பிரதேச அபிவிருத்தி வங்கி - 2014**

பிரதேச அபிவிருத்தி வங்கியின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி அதிகாரச்சட்டத்தின் 33 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில்

சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஸ்) உடன் இணங்காமை

**எல்கேஏஸ் 39 – நிதிக் கருவிகள், அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதல்** உடன் பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,160,083,733 தொகையான பதவியணியினர் கடன்கள் நிதிக் கருவியொன்றாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அது வேண்டப்பட்டவாறு முதிர்ச்சிக் கிரயத்தில் அளவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 64 ஆம் பந்தியின் படி தனிப்பட்ட ரீதியான முக்கியமான கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளுக்காக தனித்தனியான நட்டக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) மீள்நிதியிடலின் கீழுள்ள செலுத்தவேண்டிய மீள்நிதியிடல் மீதிகளுக்கும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீபீஎஸ்எல் இனால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளுக்கும் இடையே ரூபா 34,448,230 கூட்டுத்தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1942 இன் 13 ஆம் இலக்க அடகுத் தரகர்கள் கட்டளைச்சட்டத்தின் 31 ஆம் பிரிவு | இக் கட்டளைச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஏல விற்பனையொன்றின் மூலம் அல்லது அந்நோக்கத்தில் அடகு பிடிப்பாளர் ஒருவர் தன்னிடம் அடகாக வைக்கப்பட்டுள்ள அடகுப்பொருளை விலைமனுச்செய்து கொள்வனவு செய்ய முடியும் என்பதுடன் அவ்வாறான கொள்வனவின் காரணமாக அடகுத் தரகர் கொள்வனவு செய்யப்பட்ட அடகுப் பொருளின் தனிப்பட்ட உரிமையாளர் ஆவார். இந்த ஏற்பாட்டிற்கு முரணாக விற்பனை செய்யப்படாத 23.95 கிலோகிராம் அடகுப் பொருட்கள் அவ்வாறான பொருட்களுக்கான தனிப்பட்ட உரித்தினை பெற்றுக்கொள்ளாது உருக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 2012 பெப்ரவரி 23 ஆந் திகதிய 03/2012 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | திறைசேரியிடமிருந்து பொருத்தமான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாது ஓய்வுபெற்ற பொது முகாமையாளருக்கு வாகனமொன்று கையளிக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (இ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல்கள் - ஒப்பந்த முரண்கள் இன் 8.13.4 ஆம் வழிகாட்டல் | முரண்களின் கூட்டுமொத்தத் தொகை ஒப்பந்த விலையில் 10 சதவீதத்தை விஞ்சுமாயின் அவ்வாறான முரண் கட்டளைகளை வழங்குவதற்கு முன்னர் வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தை தலைவர் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இருப்பினும், பின்வரும் ஒப்பந்த வேலைகளிற்கு வழங்கப்பட்ட முரண் கட்டளைகளிற்காக தொடர்புடைய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| ஒப்பந்த வேலையின் பெயர் | ஆரம்ப ஒப்பந்த விலை | முரண் கட்டளைகளின் பெறுமதி | ஒப்பந்த விலையின் சதவீதமாக முரண் கட்டளைகளின் பெறுமதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| மிஹிந்தலையிலுள்ள கிளை அலுவலகக் கட்டிடத்தை திருத்துதல் | 1,226,216 | 2,656,182 | 217 |
| திரப்பனை கிளை கட்டிடத்தை நிர்மாணித்தல் | 20,668,821 | 9,507,451 | 46 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் நேரொத்த ரூபா 397,011,990 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 928,668,064 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 531,656,074 முன்னேற்றமொன்றை காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான காலக்கழிவு நட்டம் மற்றும் வட்டிச் செலவினம் என்பன முறையே ரூபா 999,561,030 மற்றும் ரூபா 627,908,328 இனால் குறைவடைந்தும் கட்டணமும் தரகு வருமானமும் ரூபா 48,644,978 இனால் அதிகரித்தும் இருந்தமையே நிதி விளைவுகளின் இந்த முன்னேற்றதிற்கு பிரதான காரணிகளாக காணப்பட்டன.

## 3.2 பகுப்பாய்வு ரீரியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2.1 நிதிக் கிரயம் மற்றும் நிதிசார் உழைப்பு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான நிதிக் கிரயம் மற்றும் நிதிசார் உழைப்பு என்பவற்றை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | விபரம் | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சராசரி மீதி | கிரயம்/வரு மானம் | சராசரி மீதியின் சதவீதமாக கிரயம்/வரு மானம் | சராசரி மீதி | கிரயம்/வரு மானம் | சராசரி மீதியின் சதவீதமாக கிரயம்/வரு மானம் |
| | | ரூபா 000 | ரூபா 000 | % | ரூபா 000 | ரூபா 000 | % |
| **(I)** | **நிதிக் கிரயம்** | | | | | | |
| **(அ)** | **வைப்புக்கள்** | | | | | | |
| | சேமிப்பு வைப்புக்கள் | 27,135,633 | 1,117,842 | 4.12 | 22,492,183 | 900,907 | 4.01 |
| | நிலையான வைப்புக்கள்/வைப்புச் சான்றிதழ்கள் | 40,430,295 | 3,744,264 | 9.26 | 36,145,997 | 4,607,587 | 12.75 |
| | **மொத்த வைப்புக்கள்** | **67,565,928** | **4,862,106** | **7.2** | **58,638,181** | **5,508,494** | **9.39** |
| **(ஆ)** | **கடன்பெறல்கள்** | | | | | | |
| | மீள் நிதியிடல் கடன்கள் | 7,448,855 | 370,001 | 4.97 | 5,903,403 | 262,271 | 4.44 |
| | ஏனைய கடன்கள் | 1,703,025 | 78,761 | 4.62 | 1,391,406 | 168,011 | 12.07 |
| | **மொத்த கடன்பெறல்கள்** | **9,151,880** | **448,762** | **4.90** | **7,294,809** | **430,282** | **5.90** |
| **(இ)** | **தொடக்கத்தில் நிதிக் கிரயம் (அ+ஆ) (நிறையளித்த சராசரி மூலதன கிரயம்)** | **76,717,808** | **5,310,868** | **6.92** | **65,932,989** | **5,938,776** | **9.01** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **(ஈ)** | **ஏனைய பொறுப்புக்கள்** | **4,233,544** | **-** | **-** | **3,836,925** | **-** | **-** |
| **(உ)** | **மூலதனம்** | **1,235,169** | **-** | **-** | **1,099,400** | **-** | **-** |
| **(ஊ)** | **ஒதுக்கங்கள்** | **3,399,256** | **-** | **-** | **2,957,782** | **-** | **-** |
| **(எ)** | **பங்குதாரர் உரிமைத்துவத்துடன் மொத்த ஏனைய பொறுப்புக்கள் (இ+ஈ+உ+ஊ)** | **85,585,777** | **-** | **-** | **73,827,096** | **-** | **-** |
| | **கழிக்க:** | | | | | | |
| **(ஏ)** | **ஏனைய சொத்துக்கள்** | **3,068,274** | **-** | **-** | **2,599,514** | **-** | **-** |
| **(ஐ)** | நிதிக் கிரயம் (எ-ஏ) | 82,517,503 | 3,003,545 | 3.64 | 71,227,583 | 2,699,190 | 3.79 |
| | மேந்தலைக் கிரயம் | 82,517,503 | 1,610,614 | 1.95 | 71,227,583 | 1,016,078 | 1.43 |
| | **மொத்த நிதிகள் கிரயம்** | **82,517,503** | **9,925,027** | **12.03** | **71,227,583** | **9,654,044** | **13.55** |
| **(II)** | **நிதி உழைப்பு** | | | | | | |
| | கடன் தொகுதி | 61,034,934 | 8,450,783 | 13.85 | 57,612,758 | 8,577,987 | 14.89 |
| | முதலீடுகள் | 21,482,568 | 2,142,304 | 9.97 | 13,614,825 | 1,862,946 | 13.68 |
| | **நிதி உழைப்புக்கள்** | **82,517,503** | **10,593,087** | **12.84** | **71,227,583** | **10,440,933** | **14.66** |
| | எல்லை | 82,517,503 | 668,060 | 0.81 | 71,227,583 | 786,889 | 1.10 |
| | கட்டண அடிப்படை மற்றும் ஏனைய வருமானம் | 82,517,503 | 957,488 | 1.16 | 71,227,583 | 472,915 | 0.66 |
| | **எல்லை** | **82,517,503** | **1,625,548** | **1.97** | **71,227,583** | **1,259,804** | **1.77** |
| | வரி | 82,517,503 | 1,058,054 | 1.28 | 71,227,583 | 495,086 | 0.70 |
| | **தேறிய எல்லை** | **82,517,503** | **567,494** | **0.69** | **71,227,583** | **764,718** | **1.07** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதானமாக வட்டிச் செலவினம் 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை காரணமாக வைப்புக்கள் கிரய விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் 23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கடன்பெறுதல்கள் 25 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிற்கான குறைந்த வட்டி வீதத்தின் விளைவாக கடன்பெறுதல் கிரய விகிதம் 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) மேற்படி விடயங்கள் காரணமாக 2014 ஆம் ஆண்டிற்கான நிறையளித்த சராசரி மூலதன கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான வங்கியின் முக்கியமான விகிதங்களில் சில வருமாறு.

| | வகை | துறைரீதியான விகிதம் (உத்தரவு பெற்ற விசேட வங்கிகள்) | உள்ளபடியான 2014 | உள்ளபடியான 2013 |
|---|---|---|---|---|
| **(அ)** | **இலாபத்தன்மை விகிதம்** | | | |
| | தேறிய இலாப விகிதம் | 16.41% | 8.3% | 3.61% |
| | தேறிய வட்டி எல்லை | 3.63% | 6.40% | 6.32% |
| | வட்டி வருமானத்தின் மீதான தேறிய வட்டி வருமானம் | 30.12% | 49.86% | 43.12% |
| | மொத்த வருமானத்திற்கு வட்டியல்லா வருமானம் | 10.51% | 5.30% | 5.04% |
| | வட்டி வருமானத்தின் மீது வட்டிக் கிரயம் | 69.88% | 50.14% | 56.88% |
| | தேறிய வட்டி வருமானத்தின் மீது மேந்தலைச் செலவினம் | | 30.49% | 22.57% |
| | செயற்பாட்டுச் செலவினத்திற்கு பதவியினர் கிரயம் | 50.73% | 62.26% | 72.65% |

| | | | |
|---|---|---|---|
| சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் | 2.19% | 1.09% | 0.53% |
| உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் | 14.34% | 7.39% | 4.73% |
| பங்கொன்றுக்கான உழைப்பு (ரூபா) | | 3.04 | 1.74 |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ) இணைப்பு விகிதம்** | | | |
| (i) உரிமை மூலதனத்திற்கு மொத்தச் சொத்துக்கள் | | 17.02 : 1 | 20.51 : 1 |
| (ii) உரிமை மூலதனத்திற்கு கடன்கள் | | 1.81 : 1 | 2.21 : 1 |
| **(இ) மூலதன போதுமை விகிதம்** | | | |
| (i) மட்டம் i | 23.25% | 8.87% | 8.82% |
| (ii) மட்டம் ii | 20.62% | 9.26% | 9.21% |
| **(ஈ) திரவச் சொத்துக்கள் விகிதம் (ஆகக்குறைந்தது 20 சதவீதம்)** | 67.76% | 35.51% | 25.51% |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதனப் போதுமை விகிதம் 10 சதவீத ஆகக் குறைந்த தேவையினைக் காட்டிலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இருப்பினும், 2015 சனவரி இல் ரூபா 2.5 பில்லியன் பெறுமதியான தொகுதிக்கடன்களை வழங்கிய பின்னர் மூலதனப் போதுமை விகிதம் 2015 இன் முதலாம் காலாண்டில் 11 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

(ஆ) உத்தரவுபெற்ற விசேட வங்கியின் 3.63 சதவீத சராசரி விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6.40 சதவீத மிக உயர்வான வட்டிவீத எல்லை அறிவிக்கப்பட்டது.

(இ) வங்கியின் மொத்த வருமானத்திற்கு வட்டியல்லாத வருமானத்தின் பங்களிப்பு உத்தரவுபெற்ற விசேட வங்கியின் 10.51 சதவீத சராசரி விகிதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் குறைந்த 5.30 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. ஆகையால், வங்கி மிக அதிகளவில் வட்டி வருமானத்தில் தங்கியிருப்பதுடன வட்டி வீத மாற்றத்தின் தாக்கத்திற்கு உட்படவேண்டியுள்ளது.

(ஈ) 2014 இன் வங்கித் துறையின் பகுப்பாய்வின் படி, வங்கி மொத்தச் செலவினத்தில் (வட்டிச் செலவினம் மற்றும் கட்டணமும் தரகுச் செலவினம் நீங்கலாக) உத்தரவுபெற்ற விசேட வங்கியின் 50.73 சதவீத சராசரி விகிதத்துடன் ஒப்பிடுகையில் 62.26 சதவீத மிக உயர்வான ஆளனிக் கிரயத்தை வங்கி பதிவுசெய்திருந்தது.

(உ) உத்தரவுபெற்ற விசேட வங்கியின் 2.19 சதவீத மற்றும் 14.34 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வங்கியின் சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் மற்றும் உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் என்பன முறையே 1.09 சதவீதமாகவும் 7.39 சதவீதமாக குறிப்பிடத்தக்களவில் குறைவாக காணப்பட்டன.

### 3.2.3 வங்கியின் முதிர்ச்சி நிலை

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் நிதிச் சொத்துக்களினதும் நிதிப் பொறுப்புக்களினதும் பகுப்பாய்வில் மொத்த நீண்டகால நிதிப் பொறுப்புக்கள் மொத்த நிதிச் சொத்துக்களிலும் பார்க்க மிக அதிகளவிலும் 3 முதல் 5 ஆண்டுகள் வரை மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட நீண்டகால திரவத்தன்மை இடைவெளி முறையே ரூபா 387,289,824 மற்றும் ரூபா 4,671,490,827 ஆக காணப்பட்டமை வெளிப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 0-3 மாதங்கள் | 3-12 மாதங்கள் | 1-3 வருடங்கள் | 3-5 வருடங்கள் | 5 ஆண்டுகளிற்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசும் மத்திய வங்கியுடனான மீதியும் | 236,997,574 | - | - | - | - | 236,997,574 |
| இலங்கை அரசாங்க பிணைகள் | - | 1,789,084,271 | - | - | - | 1,789,084,271 |
| வங்கிகளுடனான மீதி | 18,191,222,200 | 7,974,193,222 | - | - | - | 26,165,415,422 |
| விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்கள் | - | - | - | - | 206,300 | 206,300 |
| கடன்கள் மற்றும்ஏனைய வாடிக்கையாளரிடமிரு ந்து பெறவேண்டியவை | 10,641,256,097 | 19,030,853,503 | 17,951,645,172 | 11,028,353,538 | 9,685,055,527 | 68,337,163,837 |
| ஏனைய சொத்துக்கள் | 177,692,089 | 49,337,768 | 390,795,864 | - | - | 617,825,721 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **29,247,167,961** | **28,843,468,763** | **18,342,441,036** | **11,028,353,538** | **9,685,261,826** | **97,146,693,125** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வங்கிக்கு செலுத்தவேண்டியவை | 599,573,675 | 1,793,611,679 | 4,782,964,477 | 3,054,887,233 | - | 10,231,037,063 |
| ஏனைய வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டியவை | 25,603,386,928 | 20,806,089,165 | 5,935,939,862 | 8,088,148,842 | 13,922,523,985 | 74,356,088,781 |
| ஏனைய பொறுப்புக்கள் | 1,680,781,534 | 451,943,705 | 495,034,379 | 272,607,287 | 434,228,669 | 3,334,595,573 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **27,883,742,136** | **23,051,644,549** | **11,213,938,718** | **11,415,643,362** | **14,356,752,653** | **87,921,721,418** |
| **முதிர்ச்சி இடைவெளி** | **1,363,425,825** | **5,791,824,214** | **7,128,502,319** | **(387,289,824)** | **(4,671,490,827)** | **9,224,971,708** |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வைப்புக்கள்**

வங்கியின் வைப்புக்கள் கட்டமைப்பு உயர் கிரயம் கொண்ட நிலையான வைப்புக்களில் அதிகளவில் தங்கியிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வைப்புக்களில் அது 58 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வட்டிச் செலவினத்தில் 77 சதவீதத்தை நிலையான வைப்புக்களின் வட்டிச் செலவினம் பிரதிநிதித்துவம் செய்திருந்தது. உயர் கிரய நிலையான வைப்புக்களில் அதிகளவில் தங்கியிருத்தல் நிதிக் கிரயத்தினை பாதகமாக தாக்கலாம்.

**(ஆ) கடன் தொகுதி**

மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களிற்கு செயற்பாடற்ற கடன் விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத அதிகரிப்பைக் காண்பித்து 2014 இல் 7.69 சதவீதமாக காணப்பட்டது.

### 4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட புலனாய்வின் படி, காணப்படுகின்ற கடன் வழங்கும் நடைமுறையினை மீறி கொலன்னாவை கிளையினால் ரூபா 12.5 மில்லியன் பெறுமதியான இரண்டு கடன்கள் வழங்கப்பட்டிருந்தமை வெளிப்பட்டது. இருப்பினும், இக் கடன்களை வழங்குவதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹிக்கடுவ கிளை 2013 திசெம்பர் 13 ஆந் திகதி வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூபா 10 மில்லியன் கடனொன்றை வழங்கியிருந்தது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 31 வரை ஒரு தவணைக்கட்டணமேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவுள்ள மீதி வட்டியுடன் சேர்த்து ரூபா 13,567,123 ஆகும்.

## 5. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

வங்கி 2011 - 2015 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக உருவாக்கப்பட்ட இலக்குகள் திட்டமிடப்பட்டவாறு அடையப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் | இலக்கு | உள்ளபடியான | முரண் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இலாபம் | 1,702,240,000 | 303,539,698 | 1,398,700,302 |
| முதலீடுகள் | 33,219,153,000 | 27,505,171,827 | 5,713,981,173 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 80,752,893,000 | 61,371,585,932 | 19,381,307,068 |
| வாடிக்கையாளரிடமிருந்து வைப்புக்கள் | 105,566,914,000 | 72,525,364,971 | 33,041,549,029 |
| ஏனைய பொறுப்புக்கள் | 2,476,507,000 | 3,765,103,216 | (1,288,596,216) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டிணைந்த திட்டத்தின் படி, வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதத்தை 4 சதவீதத்திற்கு குறைவானதாக பராமரித்து வருவதற்கு வங்கி

எதிர்பார்த்திருந்தது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது 7.69 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) கிளை வலைப்பின்னலை 400 கிளைகள் வரை அதிகரிப்பதற்கும் 2014 ஆம் ஆண்டில் தன்னியக்க ரெல்லர் இயந்திர (ATM) வலைப்பின்னலை தொடங்குவதற்கும் வங்கி எதிர்பார்த்திருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதியில் 265 கிளைகள் மாத்திரம் தொழிற்பட்டு வந்திருந்ததுடன் ATM வலைப்பின்னல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 105,566 மில்லியன் வைப்புக்களை திரட்டுவதற்கு வங்கி இலக்கிட்டிருந்த போதிலும், திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 72,525 மில்லியன் அல்லது 69 சதவீதத்தை மாத்திரமே திரட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2014 இல் சேமிப்பு வைப்புக்களிற்கும் நிலையான வைப்புக்களிற்கும் இடையில் எதிர்பார்க்கப்பட்ட இணைப்பு 55:45 ஆன போதிலும், 2014 திசெம்பர் 31 இல் காணப்பட்டவாறு உள்ளபடியான இணைப்பு 42:58 ஆக இருந்தது.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2007 திசெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ 47 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு 2014 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை வங்கி தயாரித்திருக்கவில்லை.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவுகள் உரிய வேளையில் பூரணப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தவதற்கும் அவற்றிற்கு சிறந்த சந்தைப் பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கும் 2014 ஆம் ஆண்டிற்காக பிரதான கொள்வனவுத் திட்டமொன்றையும் கொள்வனவு நேர அட்டவணையொன்றையும் வங்கி தயாரித்திருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும், உண்மையான தொகைகளிற்கும் இடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது வங்கியின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன் நிர்வாகம்
(இ) மனிதவள முகாமைத்துவம்
(ஈ) கூட்டிணைந்த ஆளுகை
(உ) அடகுபிடித்தல்
(ஊ) இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களுடன் இணங்குதல்
(எ) உள்ளக கட்டுப்பாடு
(ஏ) பாதீட்டுக் கட்டுப்பாடு